127

# திருச்செந்தூர்

1956

Q23:38.21148.T
N56
112782

உ

குருபாதம்

# திருச்செந்தூர்

389

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவுள்ளப்பாங்கின் வண்ணம்

வெளியிடப் பெற்றது.

எழுதியவர்

**சைவத்திருவாளர் T. H. விவேகாநந்தம் பிள்ளை B.A.L.T.**

மதுரை, ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் தேவஸ்தான இறைபணியாளர்.

1956

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

சிவமயம்

# முன்னுரை

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

திருச்செந்தூர் செந்திலாண்டவனின் அருள்முழங்கும் தலம்; அடியவரின் உள்ளப்பிணியும், உடற்பிணியும் ஓட்டி நல்லருள் கொழிக்கும் வள்ளற் பெருமான் அங்கே பன்னிருகைக் கோலத்தனாய் – செந்தில்வாழ்வாய் வீற்றிருக்கின்றான். தமிழ்நாடு செய்த தவம்; பல்லாயிர ஆண்டுகளாகச் செந்திற்குமரன் நீலக்கடலின் மருங்கிலே தமிழ் நிலத்தைக் காத்துநிற்கிறான். தருமையாதீனம் முருகனோடு தொடர்புகொண்டது. சுப்பிரமணியப்பெருமான் இன்றும் ஆதீனத்துக் குருமுதல்வரால் பூசையேற்றுப் பொலிகிறார். இவ்வாதீனத்து நான்காவது குருமூர்த்திகள்பால் ஞானோபதேசம் பெற்ற குமரகுருபரர் செந்திலாண்டவன் அருளால் சிறந்த செய்தியை வரலாறு சொல்லும். ‘உயர்குமர குருபர முனிக்கு அம்புயத்தாள் சூடினோன்’ என்பது அருளாளர் வாக்கு.

மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவர சுவாமி தேவஸ்தான இறைபணியாளர் திருவாளர், T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள் திருச்செந்தூரிலும் திருப்பணித் தொடர்பு கொண்டவர். அவருடைய வானொலி முழக்கத்தின் வடிவமே இச் சிறு நூல்.

இதனை அச்சிட்டு வழங்கியருளும் தருமையாதீனத்து 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளங்கொண்டது, தமிழ் மக்களுக்கு நல்ல இன்பப்பேறு. பேரன்பர்கள் பெற்றுப் பயன் பெறுக. இப்பணியில் என்னையும் ஓர் பொருளாக்கி, ஈடுபடுத்தும் குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளை என்றென்றும் வாழ்த்தி வணங்குவேன்.

செந்திலாண்டவன் திருவடி வாழ்க.

அடியேன்,

தருமபுரம்,<br>18—2—'56.

**சொ. சிங்காரவேலன்,**

ஆதீனப் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியன்

---

திருச்சி அனைத்திந்திய வானொலியில் (All India Radio) 11—10—1953 அன்று இந் நூலாசிரியரால் பேசப் பெற்று, P-6 (B) 19—12—1955 அன்றைய வானொலி நிலயத்தாரின் இசைவுடன் பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

செந்திலாண்டவன் துணை

# திருச்செந்தூர்

கடற்கரையைக் கண்டாலே எல்லோருக்கும் ஒரு ஆனந்தம். உடற் பிணியையும், மனக்கவலையையும் மாற்றும் மருந்தாய் அமைந்துள்ளன கடற்கரைத் தலங்கள். நம் தளர்ந்த உடலையும் நொந்த மனத்தையும், கடல்நீராடல், நீந்துதல், படகோட்டுதல், தூயகாற்றைச் சுவாசித்தல், போன்ற பயிற்சிகள் மூலம் பண்படுத்திப் புத்துயிர் பெறச் செய்வன கடற்கரையில் அமைந்துள்ள ஊர்கள்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், இவற்றை முறையாகத் தரிசனம் செய்வதன் மூலம் உடற்பிணியையும், மனச்சோர்வையும், போக்கிக் கொள்வதுடன், ஆண்டவனருளையும், பெற்றவர்களாகிறோம். கடற்றுறையும், தல மகிமையும், ஒருங்கே அமையப்பெற்றுள்ள ஊர்களிற் சாலச்சிறந்த ஊர்கள், திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேச்வரம், வேளாங்கண்ணி, நாகர் என்பவைகளாம். இவ்வூர்கள் நீலத் திரைக்கடல் ஒரத்தில், அமைந்து, தமிழ் நாட்டிற்கே ஒரு தனிப் பெருமையைத் தருகின்றன.

இவற்றுள், திருச்செந்தூர், ஓர் பழம்பதி. இராமாயண காலத்துக்கும், முற்பட்டது. தலைச்சங்கமிருந்த, தென் மதுரையும், அதனைச் சூழ்ந்த நிலங்களும், கடல்கோட்பட்டழியவே ஆலவாய் எனப்படும் கபாடபுரம் பாண்டியர்களுக்குத் தலைநகராயிற்று. இங்கு இடைச்சங்கம் நிறுவப்பெற்றுப் பாண்டியரால் புரக்கப்பட்டு வந்ததாக, இறையனாரகப் பொருளுரை கூறுகின்றது.

தெற்குக் கடற்கரையிலுள்ள, இப்போது திருச்செந்தூர் என வழங்கும் இதனை "வெண்டலைப்புணரி அலைக்குஞ் செந்தில்" என்று புறநானூறும், "திருமணி விளக்கின் அலைவாய்" என அகநானூறும், "சீர் கெழு செந்தில்" என்று சிலப்பதிகாரமும், "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீரலைவாய்" என்று திருமுருகாற்றுப்படையும் சிறப்பித்துக் கூறுகின்றன.

இன்று இவ்வூர் பழமையும் புதுமையும் ஒருங்கு பொருந்தி, பொலிந்து விளங்குகிறது. ஆண்டவன் பெருமையால், திருச்செந்தூருக்கும், திருச்செந்தூர் உடைமையால், திருநெல்வேலி, ஜில்லாவுக்கும், சிறப்பும் மதிப்பும் இருத்தல் கண்கூடு. திருநெல்வேலிக்கு 38 மைல் தூரத்தில் ரயில், மோட்டார் வசதிகளுடன் தென் கிழக்குப் பாகத்தில் திருச்செந்தூர், அழகிய கடற்கரையில் அமைந்துள்ளது. கடற்கரையிலிருந்தபடியே, தெற்கில் சுமார் 8 மைல் தொலைவில் கடற்கரையை ஒட்டி ஒரு சிற்றூரைக் காணலாம். இவ்வூர் இந்து மகா சமுத்திரமும், மன்னர் குடாக் கடலும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு மணப்பாடு என்று பெயர். கப்பல்களுக்குத் திசைகாட்ட, இங்கு ஒரு கலங்கரை விளக்கம் நிறுவப் பட்டுள்ளது. மணப்பாட்டைச் சார்ந்து இருப்பது குலசேகரன் பட்டினம். சேர, சோழ, பாண்டிய, நாடுகளுக்குப் பொதுவாக இருந்த இயற்கைத் துறைமுகப் பட்டினம் இது. முற்காலத்தில் இங்கு வெளி நாட்டு வியாபாரம் ஓங்கி நடைபெற்றது. தூத்துக்குடித் துறைமுகப்பட்டினத்துக்கு முக்கியத்துவம் ஏற்படவே, குலசேகரன் பட்டினத்தில் வியாபாரச் செழிப்புக் குன்றியது. தலைநகருக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இடைச் சங்க காலத்தில் திருச்செந்தூர் பெற்றிருந்தது என்று தெரிகிறதல்லவா?

சதா தென்றல் காற்றும், பருவத்தில் மழையும், கோடையில் கொடிய வெப்பமின்மையும், திருச்செந்தூரைக் கோடைவாசஸ் தலமாயும், சுகாதார ஸ்தலமாயும் செய்துள்ளன. பஞ்சாயத்து மன்றத்தினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் தாலுகா தலைநகர். ஜனத் தொகை சுமார் 20000.

திருச்செந்தூர் முருகவேளினுடைய ஆறுபடை வீடுகளில் ஒன்று. இத்தலம் இயற்கை எழில் மிகுந்த இடம். கடல் அலை, கோயிலின் மதிலைச் சார்ந்து வீசுவதால், இதற்கு அலைவாய் என்று பெயர். அதனையே திருச்சீரலைவாய் என்று சிறப்பித்தழைப்பதுண்டு. முருகன் சூரசம்மாரம் செய்தபிறகு. அந்தவெற்றியைக் கொண் டாடிய இடமும் இதுவே. அதனால் செயந்திபுரம் என்று வழங்க லாயிற்று. அதுவே செந்தி என்றும், செந்தில், செந்தூர் என்றும் திரிந்து வழங்குகிறது.

ஆண்டவன் என்னும் சொல் பொதுவில் கடவுளைக் குறிப்பினும், சிறப்பாக முருகனையே குறிக்கும் இயல்புடையது. அப்படிக் குறிக்கும் போது, மற்ற தலங்களோடு சார்த்திச் சொல்லும்போது ஆண்டவன் என்பதைச் சேர்த்துச்சொல்வதில்லை. பழனியாண்டவன், செத்திலாண்டவன், என்று இரண்டு தலங்களை மட்டும் சார்த்திச் சொல்லுவதே பெரு வழக்காக இருக்கிறது. அதற்குக் காரணம் முருகப் பெருமானுடைய சாந்நித்தியம், இவ்விரு தலங்களில்தான் தெற்றென விளங்குகிறது. பரவை சூழ் நகர்க்கிறை பழனிவேல் என்றே, பகழிக் கூத்தர் பிள்ளைத்தமிழில் பகர்கிறார். செந்தில்வேலனே - பழனிவேலன்.

திருச்செந்தூரில். கடல் வெள்ளத்தருகில் முருகப் பெருமான் கருணை வெள்ளமாய், எவ்வுயிர்க்கும் தஞ்சமென நிற்கும் தனிப் பொருளாய், அகன்ற கடற்கரை மீது கந்த வெற்பில் கோயில் கொண்டுள்ளான். தண்ணென வீசும் இளங்காற்றும், குன்றென மிளிரும் மணல் மேடுகளும், அழகிய இளங்காற்றும், பாறை அணைந்த சோலைகளும், ஊற்றுக் கேணிகளும் இரவில் ஜொலிக்கும் கலங்கரை விளக்கமும், கப்பல்கள் செல்லும் காட்சியும், உயர்ந்த கோபுரமும், காண்போர்க்கு எல்லைஇல்லா இன்பத்தை அளித்து, மண்ணில், விண்ணகம், ஆக்குகின்றன.

செவ்வேளெனச் சிவந்த ஞாயிறு கடலிடைத் தோன்றி, மாலை மறையும் காட்சி மாண்புடைத்து. நீலக்கடல் மீது இளஞ் சூரியன்

உதித்தாற்போல், ஆறுமுகநயினர், மயில் வாகனத்தில் காட்சி யளிப்பதை, ஆலயத்துக்கு முன்னேயுள்ள சண்முக விலாசம் என்னும், மண்டபத்திலிருந்தபடியே காணலாம். அங்கு கடல் அலைகள் வீசி ஓசை எழுப்புவது மனமகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

ஊரைச் சுற்றிலும், வளப்பம் பொருந்திய வயல்களும், தடாகங்களும், செழுமையான சோலைகளும், பூங்கொடிகளும், அமைந்து, கண்ணுக்கு இனிமையைத் தருகின்றன. இங்கு ஏர்க்களமே போர்க்களம்போல் காட்சியளிக்கிறது. இங்குள்ள குளிர்பூம்பழன நிலங்களில் அரிகள் சரிந்துறு தலைகளுதிர்ந்திட, நமர்களடுந் தொழில் புரிய ஓசை எழுப்புவதும், அதாவது - நெல் லரிகள் சரிந்து கதிர்கள் தலைசாய்க்கப் போரடிக்கும் தொழில்புரியும் உழவர்கள் வேலையாட்களைக் களத்திற்கு வரும்படி அழைக்கக் கூவும் ஓசையும், வாளை மீன்கள் வானத்தை அளந்திடக் குதித் தெழுவதும், பறவைகள் இரையாருவதும் மறக்கமுடியாத ஒரு காட்சி. அதனாலன்றோ சேல் பட்டழிந்தது செந்தூர் வயற் பொழில் என்று அருணகிரியார் வருணித்துள்ளார்.

கத்துந் தரங்கம் முகத்தை எடுத்தெறியும் கருங்கடலில், கரையில் அமைந்துள்ள செந்திலம் பதியின் இயற்கை எழிலையும், வளப்பத்தையும் நேரில் கண்ட, திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ் பாடிய, வைணவப் புலவர் பகழிக்கூத்தர் உள்ளதை உள்ளபடியே வர்ணிப்பதைப் பார்மின். வயல்களில் வாழை களும் மலர்ச்சோலைகள் முழுதும் தேன்கூடுகளும் மலைகள் ஒவ்வொன்றிலும் வண்டினங்களும், மதில்கள் தோறும் முகிற் கூட்டமும், மதிலின் பக்கங்களில் பொன்னிற வெயிலின் படர்ச்சியும், சோலைகள் தோறும் மோதுபனியும், மென்மையான மணல்மேடுகள்தோறும் அன்னப்பறவைகளும், அருள்பாலிக்கும் நிறைவுடைய ஆண்டவன் அடிநிழலும் கொண்டுள்ள கடலலைவாய் என்கிறார். இவ்வளவு ரமணியமான காட்சியைக்கண்டு குதூகலித்த புலவரின் கற்பனைசக்தி ஊற்றெடுக்க ஆரம்பித்துவிட்டது. உவமை நயத்துடன் உயிர் ஓவியமாய்த் தன் கவியில் விளம்புவதைக் கேண்மின்.

தம் புனல் அலைவாயில், மதுஉண்டவரிவண்டுகள் இசை பாடவும், அதற்குத் தக்கபடி அன்னப் பறவைகள் நடிக்கவும், வலம் புரிச் சங்குகள் இப்பாடற்கும், ஆடற்கும் முத்துக்களைச் சொரி கின்றன. பாடல் ஆடல் பரிசுகளை, நீர் நிறை ஓடையில் நிற்கின்ற நாரைகள் வேடிக்கை பார்க்கின்றன களவியல் பழகிய கருங் கண்ணையும், பவளமெனச் சிவந்தவாயையும், முத்துக்களைப்போன்ற பற்களையுமுடைய மருத நிலமாதரும், நெய்தல் நிலமகளிரும், இவை களைக்கண்டு களிப்படைகிறார்கள். வண்டு பாட, ஓதிமம் நடிக்க, வலம்புரிமுத்தம் உமிழ, குருகுகாண, கடைசியர், நுளைச்சியர், களிகூரும் அலைவாய் என்பதில் நெஞ்சங்கவரும் அணிமலிந்து கிடக்கிறது.

அலைவாயில், கந்தமான பருவதத்தைக் குடைந்து கோயில் கட்டப்பட்டுள்ளது. பழமையும், புதுமையும், பொலிந்த தோற்றங் கொண்டுள்ளது. கருங்கற்பணியால் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பழைய நிலைமையைக் காட்டும் பொருட்டு, பிராகாரத்தில், பள்ளி கொண்ட பெருமாளும், கஜலக்ஷிமியும், மலையில் குடைந்த பழைய கோலத்தோடு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

கோயிலுக்குள் நுழையும்போதே, ஆறுமுகப்பெருமான், தெற்கு நோக்கி வீற்றிருந்தவாறு காட்சியளிக்கிறார். கிழக்கு நோக்கி மூலவராக நிற்கின்றகோலத்தில் எழுந்தருளியிருப்பவர் சுப்பிரமணியர். இவருக்குக் கரங்கள் நான்கு. அபயம், வரதம், ஒரு கையிற் பூ. ஒரு கையில் ஜபமாலை. மூலவருக்குப் பின்னால் வடமேற்காக, பஞ்சலிங்க மூர்த்தி குறுகிய இருட் டறைக்குள் எழுந்தளியுள்ளார். முருகப்பெருமான் இங்குள்ள சிவலிங்கத்தைப் பூசித்ததாக ஐதீகம். வள்ளி, தெய்வயானை அம்மையார்களுக்கு உட்பிராகாரத்திலேயே தனித்தனிக் கோயில்கள் உள.

ஊருக்கு நடுவே, சிவக்கொழுந்தீசுவரரும், ஆனந்தவல்லி அம்பாளும் எழுந்தருளியுள்ள ஒரு பழைய சிவன் கோயில் இருக்கிறது.

கடற்கரைக்கோயிலை ஒட்டி, வடக்கே, கடற்கரை ஓரத்தில், கந்த வெற்பின் தொடர்ச்சியில், ஓர் அழகிய குகைக் கோயில் இருக்கிறது. அதில் வள்ளி ஒளிந்து கொண்டதாக வழங்குகிறது. வள்ளியம்மையாரின் உருவம் அக்குகைக்குள் அமைக்கப் பட்டுள்ளது. 'வள்ளி ஒளிந்த வளநாடு' என்று இக்குகைக்கு ஒரு பெயருமுண்டு.

கடற்கரைக்கோயில் எல்லையை மிதிக்கும்போது மணல் மேட்டடியில், தூண்டுகை விநாயகர் கோயில் இருக்கிறது. பக்தர்கள் யாவரும் இவருக்கு விடலைத் தேங்காய் போட்டு விட்டுத்தான், செந்திலாண்டவனைத் தரிசிக்கப் போவார்கள்.

சண்முக விலாசத்திற்கு முன்பாக உள்ள கடற்கரையில் பயமின்றி நீராடலாம். இங்குக் கடலில் ஓரளவு தூரம்வரை பெரும்பாலும், அலைகளில் கொந்தளிப்போ, இழுப்போ, அதிகம் இராது. உல்லாசமாய்ப் படகில் போக ஏற்ற இடம். கடலோரத்தில் 24 புண்ணியதீர்த்தக் கட்டங்கள் இருக்கின்றன. இவற்றில் நீராடுவதற்கு ஒரு முறையுமுண்டு.

கடற்கரையிலேயே கட்டப்பட்டுள்ள முசாபரி பங்களாவும், தேவஸ்தான விடுதியும், பிரயாணிகளும், யாத்திரிகர்களும், தங்க வசதிகளுடையன. கோயிலுக்கு முன்புள்ள சண்முக விலாசத்திற்கு நேரே சுமார் 200 கெஜ தூரத்தில் நாழிக் கிணறு அமைந்துள்ளது. இக்கிணறு செந்திலாண்டவன் தன் வேலால் குத்தவே, தோன்றிய தாக ஐதீகம். இது ஒரு அடி சதுரமும், ஆறடி ஆழமும் உடையது. பல்லாயிரக்கணக்கான பேர்கள் இடையறுது நீராடினாலும் குறைவிலா நிறைவுடன், நன்னீர் இதில் காணப்படும். இதற்குக் கந்தபுஷ்கரணி என்றொரு பெயரும் உண்டு. நாழிக் கிணற்றைச் சேர்ந்தாற்போல், அமைந்துள்ள கிணற்றில், கந்தகவாடையும், உப்பு நீரும் இருப்பது, நாழிக் கிணற்றின் மகிமையை விளக்குகிறது.

பாஞ்சாலங்குறிச்சி வீர மன்னன் கட்டபொம்மன் 150 ஆண்டு கட்கு முன்பு நிறுவிய நகரா மண்டபங்கள் இன்னும் செந்தூரில்

காணலாம். செந்திலாண்டவனுக்கு உச்சிப்போதில் பூசை முடிந்ததை அறிந்த பின்னரே உணவு உண்பான். அதனை அறிவதற்குத் திருச்செந்தூரிலிருந்து, பாஞ்சாலங்குறிச்சிவரை 40 மைல் தூரத்துக்கும், இடையிடையே, நகரா மண்டபங்கள் நிறுவி முரசங்கள் முழங்கச்செய்து, இறுதி ஒலி கேட்டு உணவு உண்பான்.

பன்னீர் இலை விபூதிப் பிரசாதமும், மூலவருக்குப் போத்திகளின் பூசையும், திருச்செந்தூருக்குத் தனிப் பெருமையையும் தருகின்றன. திருச்செந்தூரில் பிரதி மாசியிலும் ஆவணியிலும் திருவிழாக்கள் நடக்கின்றன. ஏழாம் விழாவன்று ஆறுமுக நயினார் உருகுபலகைக் காட்சியும், பச்சை சாத்தி வரும் கோலமும், காணக் கதிதரும். அன்று ஆண்டவனுக்கு அபிஷேகமாகும் பன்னீர், வீதிகளில் வெள்ளப் பெருக்கென ஓடும். வைகாசி விசாகத்தன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பலவகைப்பட்ட அபரிமிதமான காணிக்கைகள் செலுத்திவிட்டுச் சேவித்துச் செல்வார்கள். திருச்செந்தூரில், கந்தர்சஷ்டி விழாவில்தான், மக்களின் உள்ளன்பும், உறுதி நிலையும், இறைவழிபாடும், கண் கூடாகக் காணலாம். சஷ்டியில் ஆறு நாட்களும் அன்ன ஆகாரமின்றி, முருகன் புகழ் மாலைகளைப் பாடிக்கொண்டு, மௌன விரதத்துடன், கோயிலிலேயே, தங்கியிருந்து நோன்பு நோற்பார்கள். பிரார்த்தனைக்காரர்களும், பிணியுற்றோரும், கோயிலில் அமைக்கப்பட்டுள்ள வசன அறையில் தங்கியிருந்து மெல்லிய பூங்காற்றை அனுபவித்துத் தீர்த்தமாடிச் செந்திலை உணர்ந்துணர்ந்து, உணர்வுறக் கந்தனை யறிந்தறிந்து, வழிபட்டு, வேண்டுவன முழுதும், பெற்றுய்வார்கள். இப்பிரார்த்தனை முறையை வசனமிருத்தல் என்பார்கள்.

செந்திலாண்டவனை வழிபட்டுக் கவிபாடி முக்தியடைந்தோர் பலர். குமரகுருபரர் பிறந்து ஐந்தாண்டு வரையில் ஊமையாய் இருந்து, செந்தூர்ப் பெருமான் அருளால் கந்தர் கலிவெண்பாப் பாடினார். அலைவாய் முருகன் அடியார்கட்குக் காட்சியளிக்கும்

முறையையும், அவனது ஆறு முகங்கள், பன்னிரு கைகளின் பெருமைகளையும் நக்கீரர் இனிதாகத் திருமுருகாற்றுப்படையில் விளக்குகிறார். இத்தனை சிறப்பும் ஒருங்கே பொருந்தியுள்ளதால் தான், கயிலை மலையன்ன செந்தில் என்று அருணகிரியார் புகழுகிறார். "ஒழிந்தன துன்பம் உவந்தன உள்ளம் இழிந்தன நம் வினை எல்லாம். செழும்புனற் சேந்தன் திருச்செந்தில் சேர்ந்து" என்கிறார் செந்திற்கலம்பக ஆசிரியர்.

"செந்திலாண்டவனே உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன், பின்னையொருவரையான் பின் செல்லேன்," என்று அறுதியிடுகிறார் நக்கீரதேவர். அவன் பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும் பேறும் கொடுக்க வரும் பிள்ளைப் பெருமானென்னும் பேராளன். கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும், நம் உள்ளத் துயரை ஒழித்தருள வல்லான் நம் செந்தில்மேய சேவகன்.

'வந்த வினையும், வருகின்ற வல்வினையும், கந்தனென்று சொல்லக் கலங்குமே செந்தினகர்ச் சேவகா என்று திருநீறு அணிவார்க்கு, மேவவாராதே வினை.'

'செந்திலின் இலை விபூதியைக் கண்டமாத்திரத்தில், கைகால் வலிப்பு, காசம், சயம், குட்டம் முதலாய நோயும், பூதபைசாசம் போன்ற தீவினைகள் யாவும் நீங்கிவிடும்' என ஆதிசங்கரர் தன் புஜங்க ஸ்லோகத்தும் கூறியுள்ளார்.

செந்திலம்பதியை அடைவோர்க்குச் சாகாவரமும் தந்திடும்; உடம்பிற்போகாப் பீடை போக்கி இரட்சிக்கும்; வறுமை நீங்கும்; வாழ்வுண்டாகும் எனத் திருச்செந்தூரகவல் கூறுகிறது.

